Rev. Sr. S. Marthal participated in the National Health Convention and the 82nd Annual General Body Meeting of the Catholic Health Association, held on September 25-26, 2025, at Xavier Institute of Management, Bhubaneswar, Odisha, on behalf of our Health Commission. The theme of the event was Driving Mission Sustainability: Strategic Leadership, Collaboration, and Technology.



## 7. SOCIAL OBLIGATION SERVICE SEMINAR

29.09.2025 அன்று St. John's Medical College, Bangalore–ரில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை MBBS Bond Students மூலம் 2 வருட பணி பிற்படுத்தப்பட்ட கிராமங்களை சென்றடைய வேண்டும் என்ற தலைப்பின் கீழ் கருத்தரங்கு நடைபெற்றது.



பல துறவற சபை பணியாளர்கள் மூலம் அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் தகுந்த வரைமுறைகளுடன் Rural Areas குறிப்பாக வடமாநிலங்களில் உள்ள Health Centers, Dispensaries, Hospitals அனைத்தும் St. John's Students மருத்துவர்களை பெற்று பயன் பெற்று வருகிறார்கள். நமது மருத்துவமனை மூலம் நமது சபையைச் சார்ந்த கிராமப்புற Health Centers, Dispensaries-க்கு மருத்துவர்களை பெற்றுக் கொள்ள தேவையான வழிமுறைகளை தெரிந்துக்கொள்ள இந்த கருத்தரங்கில் Sr.X. Jansi மற்றும் Sr. Sebastine கலந்து கொண்டார்கள்.

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Health Commission Co-ordinator

---



## Pope asks everyone to pray the Rosary for peace throughout October

---

### அன்னை மரியாவின் வணக்கம்

மாதே வாழ்க! தூய அரசியே!
மரியே! கடவுளின் தூய தாயே!
நீரே திருச்சபையாய் ஆன(விளங்கும்)
கன்னியும்

விண்ணகத்தில் உள்ள அதிதூய
தந்தையால்
தேர்ந்துக் கொள்ளப்பட்டவரும்
அவரது பிரியமுள்ள அதிதூய மகனுடனும்
தேற்றரவாளர் தூய ஆவியானவருடனும்
தந்தையால் திருநிலைப்படுத்தப்பட்டவரும்
ஆவீர்!



உம்மில் நிறைவான அருள் அனைத்தும்
நலன்கள் அனைத்தும் இருந்தன
இருக்கவும் செய்கின்றன.
அவரது அரண்மனையே, வாழ்க!
அவரது பெட்டகமே வாழ்க!
அவரது இல்லிடமே வாழ்க!
அவரது ஆடையே, வாழ்க!
அவரது பணிப்பெண்ணே, வாழ்க!

விசுவாசிகள் நம்பிக்கையற்ற
நிலையிலிருந்து கடவுளுக்கு
நம்பிக்கைக்குரியவராய் மாறிட
தூய ஆவியானவரின் அருளாலும்,
ஒளியாலும்
அவர்களது உள்ளங்களில் ஊற்றப்பட்ட
அனைத்து தூய புண்ணியங்களே
வாழ்க!

– தூய தந்தை பிரான்சிஸ்

# COMMUNICATION COMMISSION

## 1. இயற்கையை பாதுகாப்போம் – மரகன்று நடுதல்

17.09.2025 இன்று புனித வளனார் முதியோர் இல்லத்தில் உள்ள விளை நிலத்தில் மரம் நடுவோம், இயற்கையை பாதுகாப்போம் என்ற சிந்தனையோடு நம் தந்தை அசிசி பிரான்சிஸ்சின் ஐந்து காய பெருவிழாவை முன்னிட்டு 550 மகாகனி மரங்கள் தூய நெஞ்ச பெண்கள் மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் அருட்சகோதரி. மேரி கிறிஸ்டினா, அருட்சகோதரிகள் மற்றும் ஆசிரியர்கள், மாணவிகள், முதியோர்கள் கலந்து கொண்டு மரம் நடப்பட்டது. இந்த நிகழ்விற்கு Assision Ecology என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது.





## 2. கலைக்குழு உருவாக்குதல்

10.09.2025 அன்று ஆயர் ஜான் ஆலன் மாநிலம் திருச்சி தகவல் பணி குழு சார்பாக பெரம்பலூர் புனித டோமினிக் காப்பகத்தில் இல்லத்தில் 6, 7, 8 வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு தகவல் பணிக்குழு செயலர் சகோதரி அவிலா மற்றும் தகவல் பணிக்குழு உறுப்பினர் சகோதரிகள் விமலராணி கவிதா சேர்ந்து ஆயர் ஜான் ஆலன் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கலைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது அதேபோல் 20.09.2025 அன்று கிழக்கு மரியநாதபுரம் புனித தெரசா தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு கலைக்குழு உருவாக்கப்பட்டது.







## 3. AVAL PROJECT TRAINING PROGRAMME

The AVAL (Avoid Violence through Awareness and Learning) project training programme was held on 26.09.2025 at St. Joseph Gitrs Higher secondary School, Vepery and 27.09.2025 at St. Thomas Hospital with St. Theresa Child Jesus School of Nursing students and St. Thomas Hospital Staff.

This programme was organized by the Greater Chennai Corporation, conducted by Mr. and Mrs. Khan, focusing on safety and self-defence for girls. The session aimed to create awareness, prevent violence, and build confidence among students and working staffs.

**The trainers emphasized the importance of:** Maintaining distance, Learning from mistakes, and Keeping the body fit and alert. They then demonstrated several self-defence techniques.







The training was highly interactive, practical, and empowering. It not only equipped students with physical techniques but also gave them confidence, awareness, and courage to face challenges.

Overall, the AVAL Project created a strong impact. The students and staff expressed their gratitude and interest in attending more such useful sessions in the future.

We thank St. Joseph and St. Mary's Province communication commission members, School Principals and sisters who are all helped in this event.

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Communication Commission Co-ordinator

---



# சமூக பணிக்குழு

## 1. பெண்களுக்கான தொழில் கடன் உதவி

20.09.2025 திருச்சி ஆயர் ஜான் ஆலன் மாநிலத்தின் சமூக பயன்பாட்டு பணி குழு சார்பாக மூன்று மாதங்கள் ஆரிவொர்க் இலவச பயிற்சி பெற்றுக்கொண்ட 15 பெண்களுக்கு பாராட்டு சான்றிதழ் விழாவும் அதனைத் தொடர்ந்து சபையின் பொது ஆலோசகர் சகோதரி அருள் மேரி அவர்களின் முயற்சியால் சுய உதவிகுழு 16பெண்களுக்கு வட்டி இல்லாத கடன் தொகையும் இன்று வழங்கப்பட்டது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம் இந்த விழாவிற்கு மாநில தலைமை சகோதரி வேளாங்கண்ணி ஷெரின் அவர்களும் துணை மாநில தலைமை சகோதரி ஜெயந்தி அவர்களும் மற்றும் சமூக பயன்பாட்டு பணி குழு உறுப்பினர் சகோதரிகள் சகோதரி குளோரி சகோதரி எலிசா மற்றும் இளம் சகோதரி தமிழரசி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர் ஏறக்குறைய முப்பது பெண்கள் விழாவில் கலந்து கொண்டனர் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்.






## 2. பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின விழிப்புணர்வு

08.09.2025 அன்று அன்னையின் பிறப்பு விழாவானது பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமாகவும் உலக எழுத்தறிவு தினமாகவும் கொண்டாடப்படுகிறது இதை முன்னிட்டு திருச்சி ஆயர் ஜான் ஆலன் சமூக பயன்பாட்டு பணிக்குழு சார்பாக காப்பகங்களில் உள்ள அனைத்து பெண் குழந்தைகளுக்கும் சிறப்பு ஜெப வழிபாடும் சிறப்பு விழிப்புணர்வு புனித டோமினிக் பெரம்பலூர், பெருமாள் பாளையம் காப்பகம், திருவாளந் துறை காப்பகம் ஆகிய மூன்று காப்பகங்களிலும் பெண் குழந்தைகளுக்கு என்று சிறப்பு ஜெப வழிபாடு சிறப்பு கருத்தமர்வும் அந்தந்த காப்பக பொறுப்பாளர் சகோதரிகளால் நடத்தப்பட்டது.





## 3. சென்னை, புனித வளனார் மாநிலத்தின் சமூக பணிக்குழு செயல்பாடுகள்:

1. உலக பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு (08.09.2025) தூய நெஞ்ச பள்ளி விடுதி மாணவிகளுடன் கலை நிகழ்ச்சிகள் நடத்தி கொண்டாடப்பட்டது.

2. வந்தவாசி பங்கை சார்ந்த 50 விதவை பெண்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டது அதன் முதற்கட்ட அமர்வானது உதவி பங்குதந்தை அருட்பணி. லூயிஸ் ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது



3. St. Theresa of child Jesus school of Nursing–லில் படிக்கும் 3 மாணவிகளுக்கு United Way of Chennai மற்றும் உதவும் கரங்கள் அமைப்பின் உதவியுடன் ரூபாய் ஒரு லட்சத்து ஐந்தாயிரதுக்கான காசோலை திருவாளர். சண்முகம் அவர்களால் வழங்கப்பட்டது. உதவி செய்த இரண்டு நிறுவனங்களுக்கும் நன்றிகள். கடந்த மூன்று ஆண்டுகளாக மாணவிகள் பயனடைந்து வருகிறார்கள் இதற்கு ஏற்பாடு செய்து வரும் Sr. Rexline Michael அவர்களுக்கு நன்றிகள்.

---

## 4. சுயதொழில் முன்னேற்ற பயிற்சி



20.09.2025 அன்று அசிசி இல்லம், நேதாஜி நகரில் உள்ள சமூக பணி மையத்தின் சுய தொழில் முன்னேற்ற பயிற்சியாக ஊறுகாய் தயாரித்தல் பயிற்சியானது வழங்கப்பட்டது. இதில் 12 பெண்கள் கலந்துக் கொண்டார்கள். இப்பயிற்சியானது Sr. Mala FSJ அவர்களால் வழங்கப்பட்டது. மீன் ஊறுகாய், இறால் ஊறுகாய், மாங்காய் ஊறுகாய் போன்றவைகள் தயாரிக்கப் பயிற்சி அளிக்கப்பட்டன. இதன் வழியாக பெண்கள் வருமானத்தை பெருக்க வழிக்காட்டப்பட்டன. பெண்கள் ஆர்வத்துடன் பயின்று தயாரித்த ஊறுகாய்களை கடைகள் மற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கு விற்பனை செய்ய முன்வந்தார்கள்.

---

## 5. திருநங்கையர்களுக்கான கூட்டம்

28.09.2025 அன்று திருநங்கையர்களுக்கான கூட்டமானது நடைப்பெற்றன. இவர்கள் தினமும் பிச்சை எடுப்பதையே தொழிலாக வைத்திருப்பதால் இவர்களுக்கு மாற்று வழியாக தையல் பயிற்சி கொடுக்க முடிவு செய்யப்பட்டு இவர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டன. இவர்கள் ஆர்வமாக இருப்பதால் அவர்களுக்கான பயிற்சியானது அக்டோபர் 4–ஆம் தேதி ஆரம்பிக்கலாம் என முடிவு செய்யப்பட்டன. இக்கூட்டமானது நேதாஜி நகர் அசிசி இல்லத்தில் நடைப்பெற்றது. இதில் 10 திருநங்கையர்கள் கலந்துக் கொண்டார்கள்.



**Sr. Arul Mary**
*Social Work Commission, Co-ordinator*

# WOMEN AND FEMALE COMMISSION

## 1. பெண் குழந்தைகள் தினவிழா

செப்டம்பர் 2 ஆம் தேதி மாதா தொலைக்காட்சி குழுவில் இருந்து, செப்டம்பர் எட்டாம் தேதி, அதாவது மாதாவின் பிறப்பு நாளை முன்னிட்டு பெண் குழந்தைகள் தின விழாவை நம் சபையில் படித்துக் கொண்டிருக்கின்ற மற்றும் படித்து முடித்த ஆதரவற்ற குழந்தைகளுக்காக நம் சபை தொடங்கிய இடமான வெப்பேரியில் கலந்துரையாடல் நிகழ்வு ஒளிப்பதிவு செய்யப்பட்டது. செப்டம்பர் எட்டாம் தேதி மாலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை மாதா தொலைக்காட்சியில் இந்நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற ஒவ்வொருவரும் நம் சபையில் உள்ள அருட்சகோதரிகளின் வழியாக பெற்ற அனுபவங்கள், ஏக்கங்கள், மகிழ்வான நேரங்கள், தாக்கங்கள் மற்றும் அவர்களின் கனவுகளை பகிர்ந்து கொண்டார்கள். இறுதியாக நம் சபையின் வரலாறு மற்றும் காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப நாம் செய்கின்ற பணிகள் பற்றி அருட்சகோதரி ரோஸ் அருளப்பன் மற்றும் அருட்சகோதரி அருள்மேரி அவர்கள் சுருக்கமாக எடுத்துரைத்தனர். நம் சபை நிறுவனரின் புனித பட்டத்திற்கான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற இந்நாட்களிலே இப்படி ஒரு நிகழ்வை நமது பெண் குழந்தைகள் கொடுக்க உதவிய மாதா தொலைக்காட்சிக் குழுவிற்கும் இதை செய்ய உற்சாகப்படுத்திய நம் சபை தலைமை அன்னை ஆரோக்கியம் மற்றும் உறுதுணையாக இருந்த வெப்பேரி இல்ல தலைவி மற்றும் அருட்சகோதரிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.





---

## 2. மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகள்

12.09.2025ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டிகள் நடைபெற்றது. அதில் நம் மரியம்மாள் சிறப்புப்பள்ளி மாணவ மாணவிகள் பங்கெடுத்தனர். ஓட்டப்பந்தயத்தில் அனிஷ் மற்றும் பூஜாஸ்ஸ்ரீ இரண்டாவது இடத்தையும், குண்டு எறிதல் போட்டியில் தேசிகா முதல் இடத்தையும், தேவஸ்ஸ்ரீ மூன்றாம் இடத்தையும் பெற்றார்கள். இவ்வாறாக குழந்தைகள் ஆர்வமுடன் இந்த விளையாட்டு போட்டியில் பங்கெடுத்தனர். பயிற்சி அளித்த ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.





**Sr. Arul Mary**
*Women and Female Commission*
*Co-ordinator*

# FINANCE COMMISSION

## 1. BUDGET MEETING:

19.09.2025: The Budget Meeting was convened at the Generalate chaired by Mother General Sr.M.Arockiam along with Sr. P.S.Celia, Economer General, Sr. Emelda Leema Rose, Provincial Superior, Sr. Gnana Marie Councilor St. Mary's Vice Province, Sr. Leema, Economer Secretary with the participation of the Heads and incharges from schools, and communities. The income and expenditure of the past year and the present financial position was assessed and a budget was prepared for the upcoming year in alignment with the mission and priorities of the congregation.



## 2. SOCIETY MEETING

The Society Meeting of St. Joseph's Province was held on September 24, 2025, in Avadi. The concerned sisters were in attendance. Rev. Sr. Stella Mary, former Provincial, addressed the norms and regulations for Society Renewal. Rev. Sr. Mercy Fathima, the Provincial, instructed the sisters to follow the procedure promptly.



**Sr. Celia**
*Finance Commission, Co-ordinator*

# *Be a Francis Today!*

“In every age, God raises a light to guide the world out of darkness. In the thirteenth century, that light was St. Francis of Assisi - a man who renounced riches for simplicity, hatred for peace, and self for Christ. His words still echo

across centuries: **'Lord, make me an instrument of your peace.”**

In the quiet hills of Assisi,
a child was born,
Not crowned with gold,
nor wrapped in silk,
But destined to wear the garment of simplicity,
And to speak the language of love to all creation.

Francis, son of a wealthy merchant,
Once dreamed of glory,
of swords and shining armor,
Yet in the silence of God's whisper,
He found a greater kingdom
A kingdom not of war, but of peace.

He kissed the leper, once despised,
And saw in broken faces the radiance of Christ.
He walked barefoot upon the earth,
Calling the sun his brother,
The moon his sister,
And every bird his choir of praise.

To him, the world was a hymn,
The wind a messenger, the river a prayer.
He sang with sparrows,
He wept with the poor,
He rejoiced in the smallest flower,
For in each, he saw the Creator's hand.

When the Cross called, he answered,
Bearing the wounds of Love upon his flesh.
Yet even in suffering, he smiled,
For to Francis, pain was a pathway to joy,
And death itself a sister leading to eternal life.

O Francis, troubadour of God's mercy,
You remind us that holiness is not far,
It is in the humble act of giving,
In the gentle word of kindness,
In the courage to love without measure.
Even today, your spirit breathes
Wherever peace is sown,
Wherever the poor are lifted,
Wherever creation is cherished,
There lives the legacy of the little poor man of Assisi.

Eight hundred years ago, a man named Francis of Assisi walked the earth with nothing in his pocket but everything in his heart. He carried no sword, no riches, and no power yet his smile, his courage, and his love shook the world. Today, his voice calls us still: “Be a Francis today!”



**Sr. Priya**
Provincialate, Etmadpur

# தீபாவளித் திருநாள்

தீப ஒளி நன்னாளாம்
தீபாவளி திருநாளாம்
வானளவு மகிழ்ச்சியை
வாரித் தரும் திருநாளாம்!

பொட்டு வச்ச
மஞ்சள் புத்தாடை
லட்டுடன் கூடிய
அறுசுவை பலகாரங்கள்

கண்ணைக் கவரும் பட்டாசுக்கள்
கலர், கலரான கோலங்கள்
வானம் முழுவதும் வண்ண தூண்கள்
வாசல் முழுவதும் சந்தோஷக் கூச்சல்

இவை எல்லாம்தான் தீபாவளி!
இவை இல்லாமல் ஏது தீபாவளி?
ஒரு சிலருக்கு மட்டுமல்ல தீபாவளி
ஒட்டு மொத்த உயிருக்கும் தீபாவளி

காசைக் கொட்டி பட்டாசுக்களை
கணக்கின்றி வாங்குவோரும் உண்டு.
கண்களால் மட்டுமே பட்டாசுக்களை
கண்டு களித்துச் செல்வாரும் உண்டு.

நாம் விளைக்கு வாங்கும் பட்டாசுகளில்
எரிவது நம் பணம் என்றாலும்
கொதிப்பது ஏழையின் உலை
என்பதில் மகிழ்ச்சி அடைவோம்!

செல்வந்தனுக்கு வயிறு குறைய ஆசை
செல்வமில்லாதவனுக்கு
வயிறு நிறைய ஆசை
நல்ல உள்ளங்கள், நல்ல நாளிலே
நாடி வந்து கொடுக்கும் நல்ல உணவிற்கு
நாளெல்லாம் எதிர்பார்த்து
ஏக்கமுடன் காத்திருக்கும்
ஏழைச் சிறார்கள் பலர்
ஏழ்மையின் சூழலிலே!

எனவே,
இனிதாய்ப் பிறக்கும்
இந்தத் தீபத்திருநாளில்
ஒரு முக மனதுடனே, நாம்
ஒரு குரல் கொடுப்போம்!

சாதி மத வேறுபாடின்றி
சகலரும் கொண்டாடுவோம்!
புத்தாடை அணிந்து
புது உலகு படைப்போம்!

சுற்றமுடன் கூடி மகிழ்ந்து
சுகமான வாழ்வு வாழ்வோம்!
அன்பையும், ஒற்றுமையையும்
ஆயிரம் வருடம் நிலைக்கச் செய்வோம்!

எல்லாமும், எல்லோருக்கும்
கிடைப்பது அரிது.
அவையல்லாம், அனைவருக்கும்
கிடைக்கச் செய்வதே இனிது
என இந்நாளில் உறுதிமொழி ஏற்போம்!

நன்றி !

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



அருட்சகோதரி.
**C. ஜெயா அந்தோணி**
மையலூர்.




# அருட்சகோதரி. அல்போன்ஸ் பெர்னாண்டஸ் அவர்களின் விண்ணக பயணம்

"அவர்களின் ஆவி பிரியும் போது தாங்கள் தோன்றிய மண்ணுக்கே திரும்புவார்கள்". (திருப்பாடல் 146:4)

பிறப்பு என்பது இறப்பின் ஆரம்பம், பிறக்கும் நீ இறப்பது உறுதி, இறக்கும் நீ இறைவனில் வாழ்வது உறுதி. இன்று இறைவனில் இரண்டரக் கலந்து அன்னை மரியோடு ஜெபமாலை ஜெபிக்க இறைபதம் தஞ்சம் அடைந்துவிட்டார்கள் நம் அம்மா அல்போன்ஸ் பெர்னாண்டஸ் அவர்கள்.

இவர் தூத்துக்குடியில் தந்தை Jebamalai-க்கும் தாய் Thangammalu–க்கும் தங்கமகளாய், கடை குட்டியாக 30.07.1949ல் பிறந்தார்கள். அம்மாவுக்கு இரண்டு சகோதரிகள், ஒரு சகோதரர். திரு. Alban Fernando தூத்துகுடியிலிருந்து வேலையின் நிமித்தம் சென்னைக்கு குடிப்பெயர்ந்தவர்கள். தந்தை Jebamalaiயின் உந்துதலாலும் அன்னைமரியின் தூண்டுதலாலும் சிறுவயதிலிருந்தே தன் வாழ்வின் இரகசியங்களை அன்னைமரியின் பாதுகாவலில் வைத்து நாளும் செபமாலை செபித்து அன்னையின் திருவடியை அலங்கரித்தவர்கள்.

இறப்பு ஒரு கொடையாக கருதப்பட காரணம் அன்று உயிர்நீத்த புனிதர்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் இறப்பு கடவுள் அளித்த வரம் என்று எண்ணி வாழ்ந்தவர்கள். அதேபோன்று தன் வாழ்வின் இரகசியங்களை அன்னைமரியின் பாதுகாவலில் வைத்து நாளும், பொழுதும் வாழ்ந்தவர்கள் தான் நம் அம்மா.

தாம் வாழ்ந்த பங்குதளத்திலேயே தன் அர்ப்பண வாழ்வை தொடங்க ஆசை கொண்டார்கள். St. Patrick-ன் அடிச்சுவட்டில் வாழ்ந்த புனித வளனாரின் பிரான்சிஸ்கு சபையில் காலடி பதித்தவர்கள். தன் முதல் அர்ப்பணத்தை 1973–லும், இறுதி அர்ப்பணத்தை 1979–லும் அளித்து அகம் மகிழ்ந்தவர்.

தட்டச்சின் மூலம் பெண்களே நீங்கள் வாழ்வின் ஆதாரத்திற்கு தடம் பதிக்கவேண்டும் என்று ஓடோடி உழைத்தவர்கள். அன்னை அவர்கள் வந்தவாசி, பூந்தமல்லி, பட்டாபிராம், குன்னூர், ஜார்ஜ் டவுன், துறையூர், ஸ்ரீவைகுண்டம், பழவேற்காடு, மறைமலை நகர் என பல பணித்தளங்களில் பணியாற்றி உள்ளார்கள். செபத்தையும், வேலையையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் அம்மா அல்போன்ஸ்.

பணிவின் மூலம் தன் வாழ்வின் சிறு சிறு செயல்களால் தன்னை அடையாளப்படுத்தி கொண்டவர்கள். சிறுவர்களுக்கு மறைக்கல்வி கற்றுக்கொடுப்பதிலும் அவர்களை ஞானக்காரியங்களில் வளர்ப்பதிலும், அலாதி பிரியம் கொண்டவர்கள். திருப்பாடல்களை செபிப்பதில் கொள்ளை ஆசை கொண்டவர்கள். திருவிவிலியத்தை முழுமையாக படித்து முடித்தவர்கள். எந்த சின்னஞ் சிறிய செயலும் இறைவனுக்கு ஏற்புடையது என்பதினால் சிறு சிறு செயல்களையும் இறை உணர்வோடு செய்பவர்கள்.

சில இடங்களில் அம்மா இல்ல பொறுப்பாளராக இருந்து சகோதரிகளின் எண்ணங்களை அறிந்து, சகோதரிகளை வழிநடத்தியவர் பெரிய பிரச்சனைகளை எளிதாய் கையாளும் பக்குவம் கொண்டவர். சகோதரிகளின் இரகசியம் காப்பதில் நம்பிக்கையானவர்கள். நீண்ட நேரம் செபிப்பது நண்பர்களோடு, உரையாடுவது, ஆன்மீகக் காரியங்களை பற்றி பேசுவதில் மகிழ்ச்சி அடைவார்கள். இப்படியாக வாழ்ந்த அம்மா கடந்த ஆண்டு முதல் உடல் நல குறைவால் பாதிக்கப்பட்டார்கள். மிகவும் நலிவுற்ற நிலையில் இருந்த அம்மா அவர்களுக்கு இறைவன் நிலைவாழ்வை பரிசளிக்க அழைத்துக் கொண்டார்.

அம்மா அவர்களை பிரிந்து வாடும் சபை சகோதரிகள், குடும்பத்தார், உறவினர்கள், பணித்தள மக்கள் அனைவருக்காகவும் செபிப்போம். அம்மாவின் ஆன்மா என்றும் நித்திய அமைதியில் இளைப்பாற செபிப்போம்.



# நெய்தல் மலர்...

டில்பர்க் என்பது நெதர்லாந்தின் தெற்கு மாகாணமான வடக்கு பிரபாண்டில் உள்ள நகரம். இது மாநகராட்சியாக உயர்த்தப்பட்டிருந்தது. ஒரு காலத்தில் டச்சு ரயில்வேயின் ரயில் பராமரிப்பு தொழிற்கூடமாக இந்நகரம் இருந்தது. இடைக்காலத்தில் டில்பர்க் என்பது ஒரு குறிப்பட்ட நகரம் அல்லது கிராமம் என்பதைவிட ஒரு குறிப்பிட்ட பகுதியை குறித்து நிற்கின்றது. அதன் மக்கள் தொகை பெரும்பாலும் இரண்டு குக்கிராமங்களில் இருந்தது. அவற்றில் ஒன்று கிழக்கு டில்பர்க் மற்றது ஒஸ்ட்டில்பர்க் ஆகும். இதுவே பின்னர் ஒய்ஸ்டர்விக் “கிழக்குக் காலாண்டு“ என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இங்கு ஒரு மரத்தாலான கோட்டை அமைக்கப்பட்டிருந்தது. இக்கோட்டை மோட்டேபர்க் என்ற சிறிய குன்றின் மீது அமைந்திருந்தது. சில நூற்றாண்டுகளுக்குப்பின் இது இடிக்கப்பட்டுவிட்டது. 14ஆம் நூற்றாண்டில் டில்பர்க் ஒரு மேனராக அறிவிக்கப்பட்டது. கோயர்லுடன் சேர்ந்து “டில்பர்க் மற்றும் கோயர்லின் மேனர்“ என்று பெயர் பெற்றது. 1803ஆம் ஆண்டில் கோயர்லே டில்பர்க்கிலிருந்து பிரிக்கப்பட்டு 18ஆம் நாள் ஏப்ரல் மாதம் 1809 அன்று டில்பர்க்கிற்கு நகர அந்தஸ்து வழங்கப்பட்டது. அந்த ஆண்டில் அந்நகரம் சுமார் 9000 மக்களைக் கொண்டிருந்தது.

மன்னர் இரண்டாம் வில்லியம் (1792–1849) டில்பர்க்கை மிகவும் விரும்பினார், “இங்கே என்னால் சுதந்திரமாக சுவாசிக்க முடிகின்றது. மேலும் நான் இங்கிருக்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன்” என்று கூறியுள்ளார். இவர் டில்பர்க்கை ஆதரித்ததோடு ஆடுகளை வளர்ப்பதற்கு பணம் வழங்கி புதிய பண்ணைகளையும் அமைத்துக் கொடுத்துள்ளார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு டில்பர்க் நெதர்லாந்தின் கம்பளித் தொழிலின் தலை நகராகத் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டதற்கான முக்கியக் காரணம் இதுவேயாகும். மேலும் குதிரைப் படைகளுக்கான முகாம்களையும் அரசரே அமைத்துத் தந்தார்.

### 1.3 சமய சீர்திருத்த இயக்கம்

முற்காலத் திருச்சபை வரலாற்றில் சில வருந்தத்தக்க நிகழ்வுகளைக் காண முடிகின்றது. பழைய ஏற்பாட்டுக் கால மதகுருமார்களைப் போன்று திருச்சபையின் சட்டங்களைத் தமது போக்கிற்கேற்ப மாற்றி அமைத்துக் கொண்ட வாழ்க்கை முறைமையும், அரசர்களைப் போன்று கிறித்தவத் தலைவர்கள் ஆடம்பர வாழ்க்கையை வாழ முற்பட்டதும், ஒழுக்கக் கேடுகள், சமயக் கோட்பாடுகளில் திரிபுகள், திணிப்புகள், பாவ மன்னிப்பு என்ற பெயரில் பெறப்பட்ட பணம் மற்றும் பொருட்கள், சபையின் முக்கிய பதவிகளை பணம் கொடுத்தால் பெற முடியும் என்ற நிலை போன்றவை இயேசுவின் உண்மை வழியைப் பின்பற்றியவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. இவையே பிரிவினை இயக்கம் தொடங்குவதற்குரிய முக்கியக் காரணங்களாய் அமைந்தன. திருச்சபையின் சீர்த்திருத்தவாதியும் பிரிவினை சபையின் தந்தையுமான மார்ட்டின் லூதர் என்பவரால் (1517) அதாவது கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் கிறித்தவ சமய சீர்திருத்த இயக்கம் (Protestanism) என்கின்ற பிரிவினை சபையானது தொடங்கப்பட்டது.

இச்சீர்த்திருத்த இயக்கத்தின் விளைவாக கிறித்தவ சமயத்தில் கத்தோலிக்கர்கள் மற்றும் பிரிவினை சபையினர் என்ற இரு பிரிவுகள் உண்டாற்று. ஜெர்மனி மற்றும் ஐரோப்பாவின் வட பகுதிகளில் இந்த இயக்கம் வெகு விரைவாகப் பரவத் தொடங்கியது இது அரசியல் ரீதியாகவும், மத ரீதியாகவும் தாக்கத்தை உண்டாக்கின. இதன் காரணமாக சமயம் சார்ந்த போர்களும் ஏற்பட்டன. இச் சீர்திருத்த இயக்கம் 1750 வரை நீடித்தது. இது நெதர்லாந்து மற்றும் ஹாலந்து போன்ற பகுதிகளிலும் பரவத் தொடங்கியிருந்தது. ஹாலந்தின் தென்பாகத்தில் வாழ்ந்த மக்கள் கத்தோலிக்கத் திருமறைக்கு முற்றாக ஆதரவு தந்து தங்களது விசுவாசத்தைக் காத்துக் கொண்டனர்.

பிரபாண்ட் மக்களின் பொருளாதார நிலையில் அதிக ஏற்றத்தாழ்வுகள் இருக்கவில்லை. பிரபாண்ட் என்பது டச்சுக் கிளர்ச்சிக்குப் பிறகே பிரிக்கப்பட்டது. அதுவரை வரலாற்றுச் சிறப்புமிக்க தாழ்நில நாடுகளின் மையமாக இது அமைந்திருந்தது. வடக்கு பிராபாண்ட் என்பது நெதர்லாந்தின் தெற்கில் அமைந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டில் பின்தோபன், (Finthoven) டில்பர்க், (Tilburg) வாஸ்பிக் (Waspik) ஹெல்மண்ட் (Helmond) போன்ற நகரங்கள் தொழிற் துறையின் மையமாக வளரத் தொடங்கியிருந்தன. பொருளாதார நிலையிலும் ஓரளவு தன்னிறைவுக் கண்டவர்களாகவே அம்மக்கள் இருந்தனர் பொரும்பான்மையானோர் நடுத்தர வர்க்கத்தினர். இவர்கள் சுய தொழில் மேன்மையை உணர்ந்திருந்ததால் சிறு வியாபாரிகளாகவும் கைவினைஞர்களாகவும் தங்களை மேம்படுத்திக் கொண்டு இறை நம்பிக்கையில் திளைத்தவர்களாய் அமைதியான வாழ்வைத் தொடர்ந்து வந்தனர். உண்மையான நம்பிக்கையோடு நாம் எந்தச் செயலைச் செய்தாலும் அது இறை அருளை நிறைவாய் பெற்றுத் தரும் ஒரு ஆன்மீகத் தன்மையைப் பெற்றுவிடும் என்பதுதானே நடைமுறை.

### 1.4 முத்தைத் தந்த சிப்பி

இவ்வூரில் தோல் தயாரிக்கும் சிறு தொழிலில் தமது குடும்பத்தின் தேவைகளை கவனித்துக் கொண்டதோடு தமது குழந்தைகளையும் அன்பிலும் இறை நம்பிக்கையிலும் வளர்த்து வந்தவர் ஜெரார்ட் ஆலன் ஆவார். அவரது துணைவியார் வாஸ்பிக் நகரத்தைச் சார்ந்த

அன்டோனியா பிங்க் என்பவர். தமது வாழ்க்கைத் துணைவரின் இதயம் அறிந்து தமது குழந்தைகளை அன்பிலும் அறத்திலும் இறை வேண்டலிலும் உறுதுணையாய் நின்று வளர்த்து வந்தார். இவர்களுக்கு நான்கு குழந்தைகள். மூத்தவர் மத்தேயு கொர்னேலியுஸ் (Matheus Cornelius) இரண்டாமவர் அன்னா கொர்னேலியா (Anna Cornelia) என்ற பெண் மகவு. இவள் பிறந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே அடுத்தக் குழந்தை பிறந்தது. 1853 இல் கிறிஸ்து பிறப்பு நாளன்று பிறந்த மகன் ஜோகன்னஸ் கொர்னேலியுஸ் கிறிஸ்டோபர் (Johannes Cornelus Christopher) இவரை "ஜான்" என்று செல்லமாக வீட்டில் அழைத்தனர். கனிஷ்ட குமாரனாகப் பிறந்தவர் ஜெரார்ட் கிறிஸ்டோபர். (Gerardus Christopher) தென்றல் வீசிக் கொண்டிருந்த இக்குடும்பத்தில் திடீரென வீசிய புயலின் காரணத்தைத் தெரிந்து கொள்வதற்குள் பெரும் காற்று வந்து வீட்டுத் தலைவனை வாரிச் சுருட்டிக் கொண்டு சென்று விட்டது. அப்போது அத்தலைவருக்கு வயது வெறும் 36 மட்டுமே. வாழ்க்கையின் கால் பகுதியை மட்டுமே கடந்திருந்த வேளையில் வீட்டுத் தலைவரை பறிகொடுத்துவிட்ட இக்குடும்பத்தினர் பெரும் துயரத்திற்கு உள்ளாயினர்.

### 1.5 வாழ்க்கை ஒரு புதிர்

ஒரு தந்தை தன் மகளுக்கு விளையாட்டுப் பொருள் வாங்க கடைக்குப் போனார். கடையில் ஒரு புதிர் பொம்மை இருந்தது. அதை எடுத்து அதிலிருந்த புதிரை விடுவிக்க முயன்றார். அவரால் அப்புதிரை விடுவிக்க முடியவில்லை. அவர் மெத்தப் படித்தவர் எனினும் அவராலும் அந்த பொம்மையின் புதிருக்கு பதில் காண இயலவில்லை. எரிச்சல் கொண்ட அவர் இந்த பொம்மையே வேண்டாம் என்று சொல்லி கடைக்காரரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார். கடைக்காரர் சொன்னார் உங்களால் மட்டுமல்ல வேறு யாராலும் இப்புதிரை விடுவிக்க முடியாது என்றார். தந்தையோ பிறகு எதற்கு குழந்தைகளிடம் கொடுத்து அவர்களை சோர்வடையச் செய்கிறீர்கள் என்று கோபமாகக் கேட்டார். கடைக்காரர் நிதானமாக பதிலுரைத்தார். இது குழந்தைகளை சோர்வடையச் செய்வதற்கல்ல வாழ்க்கை என்பது புதிர் நிறைந்தது. அதில் பல மர்ம முடிச்சுகளுக்கு விடை தெரிவதில்லை. ஆனால், அதை அன்பினால் விடுவிக்க முடியும் என்று இதன்வழி கற்றுத் தரவே இதனை விற்பனை செய்கின்றோம் என்றதுடன் இந்த பொம்மையை கட்டி அணைத்து ஒரு முத்தம் கொடுத்தால் போதும் அந்தப் புதிரை அப்பொம்மையே விடுவித்துவிடும் என்றார் கடைக்காரர். அன்பின் சூஸ்துமத்தைப் புரிந்து கொண்டவராய் குழந்தையின் தந்தையோ மகிழ்வோடு அந்த பொம்மையை தன் பிள்ளைக்காக வாங்கிச் சென்றார்.

புதிர் நிறைந்த இவ்வாழ்க்கையில் துணைவரைப் பிரிந்த சோகத்தில் இல்லத் தலைவியும் நெடு நாள் வாழவில்லை. இருள் சூழ்ந்த நிலையில் குடும்பம் தத்தளித்தது. அன்னையின் சகோதரி குழந்தைகளை வாஸ்பிக்குக் அழைத்துச் சென்று வளர்த்து வரலானார். ஜானுக்கு அப்போது வயது ஒன்பது.

**Sr. Margaret Bastin**
St. Louis Convent



# Happy Birthday Sisters

May the light of heaven shine
upon you and bring peace to your heart.
May the love of God be with you always and forever.

## OCTOBER

2025

**1st**
Sr. PhilominaIrudayam
Sr. Rosalie Michael
Sr. Maria Sarprasatham
Sr. Avila Theresa

**2nd**
Sr. Anthoniammal Michael
Sr. Angeline Vincent
Sr. Velanganni .K

**3rd**
Sr. Rita Bharathi
Sr. A. Avila Theresa
Sr. S. Amalorpavamary

**7th**
Sr. P. Susai Mary
Sr. M. Roseline Mary
Sr. Madalai Mary .P

**8th**
Sr. C. Julie

**9th**
Sr. Mary Rexline

**10th**
Sr. Lilly Roseline Mary

**11th**
Sr. Mercy Angela

**12th**
Sr. Fatima Lourdes

**13th**
Sr. Sengole Mary
Sr. Baby Victoria
Sr. Metilda Arockiamary .M

**17th**
Sr. Amalorpava Rani

**18th**
Sr. A. Nambikkai Mary
Sr. Marthal V.

**19th**
Sr. Antony Virgin Sophia
Sr. Maria Goretti Lilly

**22nd**
Sr. Mary Damian
Sr. Stella Marina

**23rd**
Sr. Lilly Mary .A
Sr. Ourelia

**24th**
Sr. Josephine Indira

**26th**
Sr. Angela Samuel
Sr. Ephipani Mary

**27th**
Sr. J. Arputha May

**28th**
Sr. Chinnammani
Sr. Jebamalai Mary. K.A

**29th**
Sr. Lilly Pushpam .A
Sr. Kulandai Theresa .N
Sr. Rexline Vimala

**30th**
Sr. Mary Nirmala
Sr. Punitha Vedha Selvi

**31st**
Sr. Palli Vanaja




*Be happy & Stay blessed*

# Beloved Sisters...



# Departed in Christ....



| | |
|---|---|
| Sr. Amala Cruz | 01.10.2008 |
| Sr. Mary Bridget | 07.10.1917 |
| Sr. Rackini Jebamalai | 08.10.2008 |
| Sr. Mary Berchmans | 08.10.2013 |
| Sr. Nambikkai Mary | 13.10.2018 |
| Sr. Mary Thecla | 13.10.2020 |
| Sr. Mary Juliana | 14.10.1962 |
| Sr. Mary Clement | 24.10.1995 |
| Sr. Mary Silvester | 25.10.2020 |
| Sr. Jesintha Mary | 28.10.2020 |
| Sr. Mary Benedict | 30.10.1922 |

*May their souls Rest in Peace*



# சமூக தொடர்பு பணிக்குழு

## வேண்டுகோள்!

"**உறவே நீ பேசு**" என்ற மாத இதழ் வெற்றிகரமாக 75 இதழ்களை தந்திருக்கின்றது. உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து நம் சபையின் இந்த இதழ் சிறப்புற அமையவும், மேலும் பல செய்திகளைத் தாங்கிவர - மாநில வாரியாக ஒவ்வொரு பணிக்குழுவின் திட்டவரையறைகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புக்கள், பாராட்டுகள், புத்தகம் மற்றும் பாடல் வெளியீடுகள், பணி ஓய்வு விழா, மாநிலத்தலைவிகளின் மாதாந்திரப் பயணத்திட்டங்கள் அடங்கிய தொகுப்புகள் இவற்றை ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் அனுப்பித்தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மற்றும் முக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்கள் அனுப்பும்போது JPEG Format-ல் அனுப்பவும்.

## நம் சபையின் ஆன்மீக தந்தை
## தூய அசிசி பிரான்சிஸின் விண்ணக பிறப்பு திருவிழா
## மற்றும் தீப திருநாள் நல்வாழ்த்துக்கள்

**குறிப்பு:**

*உங்கள் பகிர்வுகள் மற்றும் பணிக்குழுக்களின் செயல்பாடுகளை கீழ்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**Email: communicationfsj2022@gmail.com**



**Dr. Sr. Mary Jenova fsj**
*General Councilor*
*Communication Commission*




Closing Ceremony of the Centenary Celebrations of Loyola College




St. Mary's Vice Province & Under Generalate Retreat - Poondi





Bishop John Aelen Province - Trichy Annual Retreat



St. Joseph's Province, Chennai. - Annual Retreat

# GENERAL COMMISSION TEAM




Evangelization Commission


Formation Commission


Vocation Commission


Education Commission


Health Commission


Social Action Commission


Women & Female Children Commission


Legal Commission


Communication Commission


Project Commission


Finance Commission